2007 ஏப்ரல் 3] [திரு. துரைமுருகன்]

போனமுறை அவர் சொன்னார்; நான் திறக்கிற அன்று, துரைமுருகன் உட்கார்ந்து -"காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததுபோல" என்று சொல்லி —திறந்துவிட்டுப் போனார். நான் நினைத்துக் கொண்டிருந்தேன், ஒரு எதிர்க்கட்சித் துணைத் தலைவருடைய வேண்டுகோளை ஏற்றுத்தான் திறந்தார் என்று. ஆனால், இன்றைக்கு நான் தெரிவிக்கிறேன்; அவர்கள் காட்டாத பெருந்தன்மையை நான் காட்டுகிறேன். உங்களுக்காக அல்ல; விவசாயிகளுக்காக. எனவே, அந்த முறையில், இன்று மாலை 5 மணிக்கு மோர்தானா அணை திறக்கப்படும் என்ற செய்தியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடத் தேர்வைப் புதிய வினாத் தாளுடன் 11–4–2007 அன்று நடத்துதல் – மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். (குறுக்கீடுகள்) விதி 110 Sir, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அப்புறம் எடுக்கலாம். உட்காருங்கள். முடிக்கட்டும். அவர் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) தேனி மாவட்டத்தில், அல்லி நகரம் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள அனைவருக்கும் கல்வி இயக்க வட்டார வள மைய அலுவலக அறை, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு வினாத்தாட்கள் கட்டுக் காப்பகமாக செயல்பட்டு வந்தது. இந்த அறையின் பின்புறத்தில் ஜன்னல் கம்பிகள் உடைக்கப்பட்டு இருந்ததாக, மேல்நிலைப் பொதுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் மையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த தேனி முதன்மைக் கல்வி அலுவலருக்கு ... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் வாசித்துக்கொண்டிருக்கிறார், உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: 2-4-2007 அன்று மாலை 6.00 மணியளவில் தொலைபேசி செய்தி பெறப்பட்டது. உடனே முதன்மைக் கல்வி அலுவலர், வினாத்தாட்கள் கட்டுக் காப்பாளர்கள் இருவருடன் வினாத்தாள் கட்டுக் காப்பக அறையைத் திறந்து, பத்தாம் வகுப்பு வினாத்தாட்கள் வைக்கப்பட்டுள்ள பீரோவைத் திறந்து பார்த்தபோது, கடைசித் தேர்வான பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடத்தின் இரண்டு வினாத்தாள் கட்டுகள் வெளிக்கவர் மற்றும் உட்கவர் பிரிக்கப்பட்டிருந்தது. பிரிக்கப்பட்ட கட்டுகளில் இருந்த வினாத்தாட்களை எண்ணிப் பார்த்தபோது, ஒவ்வொரு கட்டிலும் ஒரு வினாத்தாள் குறைந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, 5-4-2007 அன்று நடைபெறவிருந்த பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடத்தின் வினாத்தாள் வெளியாகி இருக்க வாய்ப்புள்ளதால், அப்பாடத்திற்குப் புதிய வினாத்தாட்கள் அச்சிட்டு, 11-4-2007 புதன்கிழமை அன்று, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி உட்பட, 2,634 தேர்வு மையங்களிலும், சமூக அறிவியல் பாடத்திற்கான தேர்வு நடத்த அரசு முடிவெடுத்துள்ளது. இந்நிகழ்வு குறித்து, தேனி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்மூலம், காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வினாத்தாட்கள் கட்டுக் காப்பாளர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர்மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 9-35

1. தகவல் கோரல் — தொடர்ச்சி

(ஆ) ஊரக மின்மயமாக்கல் நிறுவனத்துடன், மின்வாரியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டது தொடர்பாக

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? சொல்லுங்கள். உட்காருங்கள், வேல்முருகன். (குறுக்கீடு)

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டினுடைய நிதிநிலை அறிக்கை தொடங்கப்பெற்று, ஒரு வாரம் முடிந்து இரண்டாவது வாரத்தில் நாம் சென்று கொண்டிருக்கின்றோம். ஆனால், இதுவரை எதிர்க்கட்சிகளின் சார்பில் கொடுத்த எந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானமோ, ஒத்திவைப்புத்